ஏழாம் பதிப்பு (மறுபிரசுரம்) 1960

## பதிப்புரை

**திருமாவளவன்** என்னும் இந் நூல் 1939ஆம் ஆண்டு **கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திர** வகுப்புக்குத் தமிழ் இலக்கிய பாடமாக இலங்கை வித்தியாபகுதியாரால் நியமிக்கப்பட்டிருந்தது. பின்னர் வ. மா. ஆ. சங்கத்தினரால் (N. P. T. A.) நடாத்தப் படும் **கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திர** வகுப்புக்குத் தமிழ் இலக்கிய பாடமாக நியமிக்கப்பட்டமையால் அரும்பத விளக்கம், வினாக்கள் என்பனவும் இறுதியிற் சேர்க்கப்பட்டு மறுபடியும் நம்மாற் பதிப்பிக்கப்பட்டது. இப் பொழுது, இந்நூல், அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினராலும் (A. C. T. T. A.) எட்டாம் வகுப்புத் தமிழ் இலக்கிய பாட புத்தகமாக நியமிக்கப்பட்டுள்ளது.

15-2-60 பதிப்பகத்தார்

உரிமை பதிப்பகத்தார்க்குரியது

நிற்றல் அருமையினும் அருமை. என்னே! சீயம் போற் சீறியெழுந்து கட்புலம் கதுவாது விட்புலம் போய விஞ்சையனே அவன்! காவல, எந்நாளி லேனும் அவன் எங்கள் கண்களிற் காணப்படா திரான்; காணுவோமாயின் அவன் உயிரை உண்ணுதிரோம்" எனக் குழறிக் கூறி நின்றனர். அரசன் மனமிகவுடைந்து செயலற்று அரியணையிற் சாய்ந்தான். அவன் மனதிற் பலப்பல எண்ணங் கள் தோன்றின. இரும்பிடர்த்தலையாரே தம் மதி வன்மையால் அவனைச் சிறைமீட்டு நாட்டினின்றுங் கடத்திக்கொண்டு சென்றிருக்கவேண்டுமென்று சேட்சென்னி நினைத்தான். சில ஆண்டுகளுக்குப் பின் அவன் வருதலுங்கூடுமென்றும், வந்தால் தன்னை யும் தன் குலத்தையுங் கருவேரறுத்திடுவானென் றும் அவன் கருதினன். அப்பொழுது அவனுடைய மனம் பட்டபாட்டை என்னவென்றியம்புவது! அச் சம் அவனிடத்திற் குடிகொண்டது. அவன் நெஞ்சு நடுக்குற்றது. அவன் நிலைகுலைந்தான். எண்ணுதன எண்ணி ஏங்கினன். அவன் மனமும் மதியுங் கலங்கின. அறிவிழந்து பலவாறு பிதற்றிக்கொண்டு தன் உள்ளக் கருத்தை முகத்திற் றேக்கி வெகுண்டு நின்ற வேந்தன் நிலையைக் கண்ட காவலாளர் விரைந்து அகன்றனர்.

இரும்பிடர்த்தலையார் அன்றே மருகன் சிறைச் சாலையினின்றுந் தப்பித்தோடினன் என்று கேள்விப் பட்டு மனமகிழ்ந்தனர். அன்றைத் தினமே அவர் அவ்வூரை விடுத்து அழுந்தூரடைந்தார். அடைந்தா ரேனும் அவர் மருகன் யாண்டுறைகின்றனனே

# 8. திருமாவளவன் வெற்றிமேம்பாடு

திருமாவளவன் நாட்டிற்கு நலம் பல புரிந்து அரசாண்டு வந்தான். திருமாவளவனின் மாட்சி ஓங்க ஓங்க, சேட்சென்னியின் புதல்வர்களின் உள்ளம் புழுங்கின. உலகிற் பொருமை என்னும் குணம் மக்கள் மனதைக் கொள்ளைகொள்ளுமாயின் அன்னர் செய்வினை அறியும் திறன் படையாது, நல்வினை குன்ற, தீவினையால் நலிந்து, அல்லன செய்தற்கு ஒருப்பட்டு அல்லல் உறுவர். அக்காலை, அவர்களைப் பேய்க்கோட்பட்டாரென்றே கூறிவிட லாம். எத்துணைப் பெரியோர்கள் வந்து விழுமிய நல்லுரைகள் கூறினும் யாவுஞ் செவிடன் காதில் ஊதுஞ் சங்கேயாகும். அன்னர் தாம் செய்யப்புகும் கரு மங்கள் யாவை என்பதையும் எத்தகைய விளைவுண் டாகும் என்பதையுஞ் சிறிதுஞ் சிந்தித்துணரார்கள். அந்தோ! பொருமை என்னும் பேய்க்கோட்பட்டார் அல்லலுற்று நலமிலா வாழ்க்கையில் நாளும் மனக் களிப்பின்றி வாழ்நாளைக் கழிப்பர். பொருமையே கோபம், கொலை முதலிய தீக்கருமங்களுக்குக் காரணமாகும். பொருமையே பகைமையைத் தோற்றுவித்து அழியாப் பழியையுந் துன்ப முடிவை யும் உண்டாக்கும்.

சேட்சென்னியின் புதல்வர்கள் பொருமை மிகுதி யாலும் பகைமையாலும் எவ்வாருயினுந் திருமா

யுடையது காவிரிப்பூம்பட்டினம் என்று எல்லோரும் போற்றிக் கூறுவர். சோனகர், சீனர், சாவகர், உரோமர் முதலிய பல நாட்டோருங் காவிரிப்பூம் பட்டினத்தை யடைந்து வாணிபம் பேணி வந்தனர். அதனாலும் நாட்டிற் செல்வம் பெருகிற்று.

திருமாவளவன் கல்வியைக் கண்ணென மதித்து வந்தனன். அவனுக்குப் பெருந்துணையாகவும் ஆசிரியராகவும் இருந்து வந்தவர் இரும்பிடர்த்தலையார் என்னும் புலவர் அன்றோ? கல்வியைப் பெருக்கித் தன் நாட்டுக் குடிகளின் அகவிருளை யோட்டி மேன்மைப்படுத்தவேண்டியது தன்கடனே என்பதை அவன் உணர்ந்திருந்தான். அதனால் அவன் தன் நாட்டில் எங்குங் கல்விக் கழகங்களை நிறுவி மக்களுக்குக் கல்வி புகட்டி வந்தனன். அவன் காலத்திற் புத்தக நிலையங்கள் பல நிறைந்து விளங்கின. ஆங்காங்குத் தமிழ்ச் சங்கங்களை நிறுவிப் புலவர்களை அவைகளிற் சேர்த்துத் தமிழ்க் கல்வியைப் பரவச் செய்தான். அதனாலுந் தமிழ்க் கல்வி பரவலாயிற்று. அவன் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தான். அவன் காலத்திற் பல்வேறு சமயத்தவர்களும் இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

திருமாவளவன், குடிகளிடத்தில் ஆறில் ஒரு பகுதியையே அரசுக்குரிய கடமையாகக் கொண்டான். அவ்வாறு கொண்ட வரிப்பணத்தையுங் குடிகளின் நன்மையைக் கருதியே செலவிட்டு வந்தான். காவிரிப் பேராற்றில் அணைகட்டிக் கால்வாய்கள் வெட்டி நீர்ப்பாசன வசதிகளைச் செய்து வேளாண் மக்க

# அரும்பத அகராதி

## 1ஆம் பாடம்: மைந்தன் பிறப்பு

**பக்கம் 1**

மங்கலம் – சிறப்பு
சான்ருேர் – பெரியோர்
நடுநாயகம் - நடுவில் தலைமை (முதன்மை)
புனல் - நீர்
புனிதம் - சுத்தம்
தீம் - இனிய
அளித்தல் - கொடுத்தல்
செழுமை - செழிப்பு
குடகு - மேற்கு
கொழிக்கும் - தள்ளும்
பாவலர் - புலவர்
மாண்பு - சிறப்பு
தலம் - கோயில்
செங்கதிர்ச் செல்வன் –சூரியன்

**பக்கம் 2**

என்பு – எலும்பு
மாட்சி – சிறப்பு
மரபு – குலம்
உதித்தல் - பிறத்தல்
வழுவாத - தவருத
ஆ - பசு
தேர்க்கால் - தேர்ச்சில்
மூதாட்டி-முதுமையடைந்தவள்
நவின்ற - கூறிய
நானிலம் – பூமி
வரையாது - அளவுபடாது
வள்ளல் – கொடையாளி
மல்கி – நிறைந்து, பெருகி
சிர் – சிறப்பு
திறத்தது-தன்மையையுடையது
சாதனம் - ஆதாரம்
சிலாசாசனம் – கல்வெட்டு

**பக்கம் 3**

வானரம் – குரங்கு
கேரளம் - மலையாளம்
உணர்தல் – அறிதல்
செம்பியர் – சோழர்

**பக்கம் 4**

முடிகவித்தல் – முடிசூட்டுதல்
திரு - இலக்குமி
கோனெறி - அரசுமுறை
கோடாது – மாருது
ஊக்கம் - முயற்சி
ஆக்கம் – செல்வம்
மறப்பண்பு - வீரஇயல்பு
அமர் - போர்
சமர்த்தன் – வல்லவன்
விளம்புதல் – கூறுதல்
பஃறேர் – பல்தேர்

**பக்கம் 13**

சூழ்ச்சி - ஆலோசனை
வதிந்து – வாழ்ந்து
அறியொணு – அறியமுடியாத
எளிது – இலகு
இடையூறு - தடை
செவியறிவுறுத்தி – உறுதி வாய்ந்த அறிவு கூறி

**பக்கம் 14**

கயவர் – கீழ்மக்கள்
கருணை – இரக்கம்
உய்வழி – தப்பும்வழி
அலமந்து – சுழன்று
விதிர்த்து – நடுங்கி
கடுகி - விரைந்து
திக்கற்ருேர் - அநாதைகள்
மருள் - மயக்கம்

**பக்கம் 15**

முளரி - தாமரை
ஆகம் - மார்பு
தழல் - நெருப்பு
ஊழ்வினை - விதி
ஊட்டும் - உண்பிக்கும்

**பக்கம் 16**

மலைதல் - போர்புரிதல்
ஈர்த்து - இழுத்து
காரா – காராம்பசு
கதி - போக்கு

**பக்கம் 17**

துகில் - சீலை
உறுதி – நன்மை
பருக - குடிக்க
சாளரம் - பலகணி
பொல்லாங்கு – துன்பம்
ஆதரவு - உதவி
அழுங்கி - வருந்தி

**பக்கம் 18**

பற்றுக்கோடு - ஆதாரம்
அளவளாவுதல் - கலந்து மகிழ்ந்துரையாடுதல்
இடுக்கண் - துன்பம்
அற்றம் - சமயம்

## 3ஆம் பாடம்: சிறை வெளிப்பாடு

**பக்கம் 19**

சிறைக்கூடம் – மறியல்வீடு
களிப்பு - மகிழ்வு

**பக்கம் 20**

குருளை – குட்டி
மிகல் - அதிகரித்தல்

இழைத்த – செய்த
அன்னை – தாய்
அழல் – நெருப்பு
குழைதல் – உருகுதல்
மாதுலன் - மாமன்
திறம் – தன்மை
ஒப்பு – சமம்
உயர்வு – மேம்பாடு

**பக்கம் 21**

இகழ்ந்து – அவமதித்து
அற்றைநாள் - அன்று + நாள்
கதவம் – கதவு
ஆண்டு - அவ்விடம்
சீயம் - சிங்கம்

**பக்கம் 22**

சாம்புதல் – தளர்தல்
ஏடு - நூல்
சிற்றூர் - சிறுமை + ஊர்
பேரூர் - பெருமை + ஊர்
பார்த்திபன் - அரசன்
கட்புலன் - கண்ணுக்குப் புலனுதல்
இலக்கு – அகப்படுதல்

**பக்கம் 23**

கதுவாது – அகப்படாது
அரியணை – சிங்காசனம்
கரு – பிறப்பு
தேக்கி - அதிகரித்து
வெகுண்டு - கோபித்து
யாண்டு – எங்கே

**பக்க்ம் 24**

ஆவல் – ஆசை

## 4ஆம் பாடம்: களிறுகொணர்ந்த காவலன்

**பக்கம் 25**

எரி - அக்கினி
தீ - அக்கினி
நகரம் – பட்டணம்
குழுமி – கூடி
பல்லாறு - பலவழி
சால - மிக (உரிச்சொல்)
அல்லல் – துன்பம்
களித்தல் - மகிழ்தல்

**பக்கம் 26**

மண்ணுலகு – பூமி
பொன்னுலகு – சுவர்க்கம்
சச்சரவு – சண்டை
பிணித்து - கட்டி
களிறு – யானை

**பக்கம் 27**

தொடையல் - மாலை
நழுவல் – வழுவல்
எய்துதல் – அடைதல்
உசாவி – வினவி
செம்மல் - தலைவன்
கரந்து – மறைந்து
தொல்பதி - பழைய ஊர்

**பக்கம் 28**

உரு – உருவம்

பேரின்னல் – (பெருமை + இன்னல்)

தாழ்நிலை – இழிந்த நிலை

உபாயம் – தந்திரம்

**பக்கம் 29**

பாங்குற – சிறப்புற

எருத்தம் – பிடர்

குறுகி – அடைந்து

போர்க்களம் – போர்செய்யும் இடம்

மலங்க – மயங்க

ஓம்பி – பாதுகாத்து

**பக்கம் 30**

நட்புக்கிழமை - நட்புரிமை

கன்னி – அழியாதது

**பக்கம் 31**

மூதறிஞர் – முதுமை + அறிஞர்

பிணித்தல் – கட்டுதல்

புழைக்கை – துவாரம் பொருந்திய கை

நல்லூழ் – நல்லவிதி

அரியாசனம் – சிங்காசனம்

வழுதி - பாண்டியன்

**பக்கம் 32**

நுண்ணறிவு நுண்மை + அறிவு

அவலம் – வீண்

பண்டு - முன்னர்

வாக்களித்தல் – உறுதிகூறல்

**பக்கம் 33**

கம்பீரம் – பரிமளிப்பு

திளைத்து – நிரம்பி

**பக்கம் 34**

கல்மாஷபாதன் – கரிந்தகாலையுடையவன்

## 5ஆம் பாடம் : திருமாவளவன்

**பக்கம் 35**

குடிகொள்ளல் - தங்கியிருத்தல்

கடைப்பிடித்தல் – மேற்கொள்ளல்

அமயம் – சமயம்

உறுதல் – பொருந்துதல்

நாளும் – தினமும்

அழுக்காறு – பொறாமை

முனைந்து - முற்பட்டு

**பக்கம் 36**

வாய்மொழி – முறைப்பாடு

நெறி – முறை

திறம்பா - வழுவா

செங்கோல் – செவ்விய ஆட்சி

நானிலம் - பூமி (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்)

ஐவகை அச்சம் - ஐந்துவகையாக ஏற்படும் பயம் (தன்னால், தன் பரிசனத்தால், கள்வரால், பகைவரால், விலங்குகளால்)
பரிபாலித்தல் - பாதுகாத்தல்
நீச்சம் - நீந்துதல்
குலவித்தை - குலத்துக்குரிய வித்தை
தகைமை - தன்மை
பேரவை - பெரியசபை
நண்ணுதல் - அடைதல்
மீது - மேல்
இளையோன் - குறைந்தவன்

**பக்கம் 37**

நலம்பட - நன்மைதர
திறம் - இயல்பு
தெளிந்த அறிவு - களங்கமற்ற அறிவு
பாலித்தல் - கடாத்துதல்
நரைமுது மக்கள் - நரையுடைய முதியவர்கள்
உரைமுடிபு - தீர்ப்பு
உவப்பு - மகிழ்ச்சி
அக்கணம் - உடனே
புன்முறுவல் - புன்சிரிப்பு
பூத்து - அரும்பி
நாண் - வெட்கம் (நாணம்)
உருவு - உருவம்
எள்ளல் - இகழல்
முதுமொழி - பழமொழி
அவமானம் - இழிவு
உரவோன் - வலியவன்
கருத்து - எண்ணம்
நைதல் - வருந்துதல்
சுடர் - சூரியன்
வழி - மரபு
பீடு - பெருமை
தோன்றல் - தலைவன்

**பக்கம் 38**

இயம்புதல் - கூறுதல்
பாய்வு - பாய்தல்
புரக்கும் - பாதுகாக்கும்
கிழவோய் - உரிமையுடையவனே
கொற்றம் - வெற்றி
வன்மை - வல்லமை
ஈடு - சமம்
வளவர் - சோழர்
சிகாமணி - முடியிற்சூடும் மணி
அகந்தை - ஆணவம், அகங்காரம்
அங்கை நெல்லிக்கனி - உள்ளங்கை நெல்லிக்கனி
குலதிலகம் - குலமுதன்மையுடையான்
செம்பியர் - சோழர்
அவமதித்த - இழித்துக் கூறிய
வியந்து - புகழ்ந்து

**பக்கம் 39**

நன்னாடு - நன்மை+நாடு
நவின்றனர் - கூறினர்

தொல்குலம் – பழைய குலம்
இமசேதுபரியந்தம் - இமயமலை தொடக்கம் சேதுவரையும்
கொள்வது - பெறுவது
பஃறடக்கை - பல
தடக்கை - விசாலமான கை
வேட்ட - வேள்விசெய்த

**பக்கம் 40**

எங்கணும் - எல்லாவிடமும்
புழுங்கிய – வெந்த
இன்னு - துன்பம் (தீமை)
நன்னயம் - நன்மை+நயம்
இடையூறு - கெடுதி
ஆன்றோர் – பெரியோர்
பரிபாலித்து – ஆட்சிபுரிந்து

## 6ஆம் பாடம் : பூம்புகார்

**பக்கம் 41**

கணித்து - ஆராய்ந்து
உய்வழி - தப்பும் மார்க்கம்
எவ்வாற்றானும் – எவ்வித மேனும்
நலன் – நன்மை
நாடுதல் – விரும்புதல்
செம்மையாய் – சிறப்பாய்
துறை – வழி
உறவினர் - இனத்தவர்
துணைவலி - படைவலிமை
எய்தி - அடைந்து

**பக்கம் 42**

அருள் – இரக்கம்
அறவோர் - தருமவான்கள்
அந்தணர் – பிராமணர்
ஓம்பல் – பாதுகாத்தல்
சுற்றம் – உறவு
தழுவல் - கொண்டாடுதல்
விருந்தினர் – புதியவர்
பேணல் – பாதுகாத்தல்
இரவலர் – பிச்சையேற்போர்
செவ்வன் - சிறப்பாக
ஆற்றி – செய்து
தகுவது - தக்கது
உசாவி - ஆலோசித்து
நிலைநாட்டல் – நிலைநிறுத்தல்
பாலது – தன்மையது
வாணிபம் – வியாபாரம்
பேணி - பாதுகாத்து
அலைகடல் - அலைகின்றகடல்
கலம் – கப்பல்
போக்கி - செலுத்தி
ஈட்டுவது – சம்பாதிப்பது
நெறி - வழி, (மார்க்கம்)
துறை - பகுதி

**பக்கம் 43**

இசைதல் - ஒப்புதல்
இராசதானி – அரசகருமங்கள் நடைபெறும் இடம்
பண்டும் - முன்னரும்
புரிந்திட - செய்திட

தொன்மை - பழமை
மிக்கது - சிறந்தது
இமையவர் - தேவர்
பொலிவு - அலங்காரம்
போந்திருந்தனர்-வந்திருந்தனர்
தொன்னூல்கள் - பழைய நூல்கள்

**பக்கம் 44**

ஐயப்பாடு சந்தேகம்
பனிமதிசூடும் - குளிர்ந்த சந்திரனை அணிந்த
பொன்னுலகு - தேவலோகம்
போற்றும் - புகழும்
புரோகிதர் - புரோகிதம் செய்வோர்
ஆவணவிதி - கடைவீதி

**பக்கம் 45**

இசைக்கருவி - இசைக்கு ஏற்ற யாழ் முதலிய கருவிகள்
சூதர் — நின்றேத்துவார் (புகழ்வார்)
மாகதர் - இருந்தேத்துவார் (புகழ்வார்)
சோதிடர் - சோதிடம் சொல்வோர்
நாளங்காடி - பகற்காலத்தே கடைகள் கூடும் இடம்
குமரகோட்டம் - குமரன் கோயில்
வாசவன் - இந்திரன்
வச்சிரக்கோட்டம் -இந்திரனது வச்சிராயுதம் அமைந்துள்ள கோயில்
அருகன் - சமணசமயக்கடவுள்
விகாரம் - விகாரை
குன்று - மலை
செறிந்து - நெருங்கி
கூலம் - தானியம்
தொகுத்தல் - சேர்த்தல்

**பக்கம் 46**

சுங்கச்சாலை - திறை அறவிடும் இடம்
கலங்கரை விளக்கம் - கப்பல்களை வழிகாட்டி அழைக்கும் இடம், வெளிச்சவீடு.
சோமகுண்டம் - ஒரு தீர்த்தம்
துடைத்தல் - நீக்குதல்
கைம்மாறு - பதிலுபகாரம்
மறக்குடி - வீரர்குடி
பலி - பூசை
குரவை - ஒருவகைக் கூத்து
அமைச்சர் - மந்திரிமார்
கவிவாணர் - புலவர்
பண்டப் பொதி - பண்டங்கள் சேர்ந்த கட்டு

**பக்கம் 47**

கவர - பற்ற
இலஞ்சி - குளம்
படிந்தோர் - தோய்ந்தோர்
வலி - பலம்

சாலி - ஒருவகை நெல்

சிறை - காவல்

விளையுட்டாக - விளைவுள்ளதாக

புரக்கும் - பாதுகாக்கும்

கிழவோன் - உரியவன்

வாயார - வாய் நிறைய

பேரணை - பெருமை + அணை

திரிசிரபுரம் - திருச்சிராப்பள்ளி

**பக்கம் 53**

பல்லாறு - பலவழி

ஓம்பி - பாதுகாத்து

கொள்ளுமா கொள்ளல் - கொள்ளவேண்டிய அளவு கொள்ளல்

துலங்கியது - விளங்கியது

ஏரி - வாவி

ஏற்றம் - துலா

வாரி - விளைவு

சுரக்கும் - தரும்

வளன் - பயன்

தேரின் - ஆராயின்

அரிகால் - அரியப்பட்டகால்

சாலும் - அமையும்

"ஏரியும் ஏற்றத்தினாலும்" - பிறநாடுகளிலே வாவிகளின் மூலம் நீர்ப்பாய்ச்சியும் துலாவின் மூலம் இறைத்து நீர்ப் பாய்ச்சியும் பெறக்கூடிய பயன்களின் மொத்தத் தொகையின் அளவு கரிகாலனது காவிரிநாட்டில் நெல்லை அரியும்போது கீழே சிந்தும் நெல்லின் அளவுக்குச் சரியென்பது பொழிப்பு

புனைந்து - புகழ்ந்து

மா - விலங்கு

ஏகல் - போதல்

குடிசை - சிறுவீடு

**பக்கம் 54**

அச்சம் - பயம்

சிருர் - குழந்தைகள்

ஒலிக்க - சப்திக்க

புதர் - பற்றை

கானகம் - காடு

**பக்கம் 55**

மானக்கேடு - அவமானம்

சீரிய - சிறந்த

செப்புதல் - கூறுதல்

அயல் - பக்கம்

மாது - பெண்

நங்கை - பெண்

எழில் - அழகு

மடமங்கை - இளம்பெண்

ஐயுறுதல் - சந்தேகித்தல்

மகிதலம் - பூமி

பொற்கொடி - பொற்கொம்பு

எளிது - இலகு

அவா - ஆசை

திருஅனையாய் - இலக்குமி போன்றவளே

**பக்கம் 56**

பல்லோர் - பலர்
கண்கவர் - கண்ணுக்கு இனிமை
குலமுறை - சந்ததி
வேண்டுகோள் - விருப்பு
சுடர்த்தொடி - ஒளிபொருந்திய வளையல்
அன்னான் - அவன்
சொல்லியல்பெரு - சொல்ல முடியாத
மேனி - உடம்பு
ஒல்கிட - வளைய
நின்பால் - உன்பக்கம்
வேட்கை - ஆசை
வயம் - பக்கம்
குறையிரந்து - குறையைக் கூறி இரந்து
கூற்று - சொல்
சூழ்ச்சிகள் - வஞ்சக ஆலோசனைகள்
பலித்தன - நிறைவேறின
சூழல் - பக்கம் (அயல்)

**பக்கம் 57**

நன்னீர் - நன்மை+நீர்
ஓடை - கால்வாய்
தண்மை - குளிர்மை
புள் - பறவை
மாவேட்டம் - மிருகவேட்டை
கண்களுக்கு விருந்து - கண்களுக்குப் புதுமை
காலி - பசுநிரை
மதுகரம் - வண்டு
நாணி - வெட்கி
பொற்பின்செல்வி - அழகின் செல்வி

**பக்கம் 58**

நிகர் - போன்ற
மொழியாய் - மொழியை யுடையவனே
புவி - பூமி.
ஒப்பிலா - உவமையில்லாத
அணிகலன் - ஆபரணம்
வரலாறு - கதை
அமுதனைய - அமுதம்போன்ற
பரிவு - அன்பு
பாவனை - பே லிவேஷம்
கொடுவாய்ப்புலி - கொடிய வாயையுடைய புலி
வனிதை - பெண்

**பக்கம் 59**

கோயில் - மாளிகை
விதிமுறை - நூல்முறை

**பக்கம் 60**

பேதை - அறிவிலி
நுணல் - தவளை
தகைமை - தன்மை
பசப்பு - பாசாங்கு
வஞ்சித்து - ஏமாற்றி
மதி - அறிவு
பாவை - சூத்திரப்பாவை

**பக்கம் 61**

நலிவு - வருத்தம்

## 8ஆம் பாடம்: திருமாவளவன் வெற்றி மேம்பாடு

**பக்கம் 62**

ஓங்க - அதிகரிக்க
உள்ளம் - மனம்
புழுங்கின - வெந்தன
அன்னார் - அவர்
கொள்ளைகொள்ளல் - பிடித்தல்
திறன் - தன்மை
படையாது - பெருது
குன்ற - குறைய
நலிந்து - வருந்தி
அல்லன - தீமை
ஒருப்பட்டு - சம்மதித்து
உறுவர் - அடைவர்
அக்காலை - அச்சமயத்து
பேய்க்கோட்பட்டார் - பேயாற் பிடிக்கப்பட்டவர்
எத்துணை - எவ்வளவு
விழுமிய - சிறந்த
நல்லுரைகள் - அறிவுரைகள்
விளைவு - முடிவு
களிப்பு - மகிழ்ச்சி

**பக்கம் 63**

எய்துவான் - அடைவான்
சிந்தித்தல் - ஆலோசித்தல்
வெள்ளிடைமலைபோல விளங்கல் - நன்கு புலப்படல்
ஆற்றல் - வல்லமை
வள்ளன்மை - கொடை
அஞ்சாநெஞ்சு - துணிவு
போர்முனை - போர்க்களம்
விறலோன் - வெற்றியாளன்
முன்னிய - எதிர்ப்பட்ட
வெந்நிட்டு - முதுகிட்டு

**பக்கம் 64**

ஒடுக்க - குறைக்க
பால் - பக்கம்
ஆவன - செய்யவேண்டுவன
ஆக்கம் - செல்வம், சிறப்பு
நாடி - தேடி
ஊக்கம் - உற்சாகம்
ஒற்றர் - வேவு பார்க்குந் தூதர்

**பக்கம் 65**

தகுவன - தக்கன
சூழ்ச்சி - வஞ்சனை
பெருமிதம் - மேம்பாடு

**பக்கம் 66**

அளவிலா - அளவற்ற
உவகை - மகிழ்ச்சி
சீற்றம் - கோபம்
உருகெழு - அச்சம் மிகுந்த
குருசில் - தலைவன்
ஒருகளம் - ஒருபோர்க்களம்
பொருதல் - சண்டை செய்தல்
தானை - சேனை
சித்தப்படுத்தல் - ஆயத்தஞ் செய்தல்
அணுகி - கிட்டி

வாளா - வீணே
துரு - கறை
பூரித்த - நிறைந்த
நசை - விருப்பு
களி - மகிழ்ச்சி
இக்காலை - இச்சமயம்
கொற்றம் - வெற்றி

**பக்கம் 67**

வேளிர் - குறுநில அரசர்
மறம் - வீரம்
தேக்கி - மேம்பட்டு
கடுவரை நீரிற் கடுத்துவரல் - பெரிய மலையினின்று வழியும் நீர்போல விரைந்துவரல்
மாற்றலர் - பகைவர்
கூற்றூர் - இயமனூர்
மேவ - அடைய
செகுத்திடும் - அழிக்கும்
திறல் - வலி
ஆரவாரித்து - மகிழ்ந்து
காய்கெழு - தாக்குதல் மிக்க
கன்னிப்போர் - முதற்போர்
உட்கி - மடிந்து
வடக்கிருத்தல் - முதுகிற் காயம் படின் அதற்காக வருந்தி வடக்கே சென்று உணவருந் தாது உயிர்விடல்

**பக்கம் 68**

காய்சினம் - மிக்க சினம்
கடகளிறு - மதமுள்ள யானை
பீடு - பெருமை
கூறு - பகுதி

**பக்கம் 69**

அளவிடற்கரிய - அளவிட முடியாத
இன்னல் - துன்பம்
கோட்டம் - பகுதி
ஆவன - செய்ய வேண்டுவன

**பக்கம் 70**

காமக்கோட்டம் - காமன் கோயில்
செண்டு - ஒருவகை ஆயுதம்
வெற்பு - மலை
திரித்த - மாறுபடுத்திய

**பக்கம் 71**

குழாம் - கூட்டம்
மிலைந்து - சூடி
ஓகை - வெற்றிமகிழ்ச்சி
வண்டமிழ் - வண்மை + தமிழ்
வளப்படுத்துவது - செழிப் பாக்குவது
ஆணை - கட்டளை
கப்பம் - திறை
வருகை - வருதல்

**பக்கம் 72**

துஞ்சிய - இறந்த
வழுதி - பாண்டியன்

பழம்நழுவிப் பாலில் விழுதல் - மேலும் நன்மை தரல்
நிமித்திகர் – சோதிடர்
கூவி – அழைத்து
ஓலை - திருமண அழைப்பு
அமராவதி - தேவலோகம்

**பக்கம் 79**

புடைசூழ - பக்கத்தே வர
போந்த - வந்த
அரதநபீடம் - இரத்தின பீடம்
நன்முகூர்த்தம் - நல்லநாள்
பல்லாண்டு - வாழ்த்து
பல்லியம் - பலவாத்தியங்கள்
மங்கலநாண் - தாலி
புனைந்தான் - சூட்டினன்
மணவினை – மணவிழா
பண்டாரம் - பொக்கிஷசாலை
ஆசி - ஆசீர்வாதம்
வைபவம் - சிறந்தவிழா

**பக்கம் 80**

உரையாடி - சம்பாஷித்து
பேறு – பயன்
அறவோர் – தருமவான்கள்
நரைமூதாட்டி - ஔவையார்
தீதில் – குற்றமற்ற
ஆகம் - உடம்பு
கண்டனம் – கண்டோம்
வற்று இயல்பு - குறையாத தன்மை
பீடு – பெருமை

**பக்கம் 81**

புதுநீர் – வெள்ளம்
துறை – இடம்
காலை - சமயம்
பூசித்தல் – வணங்கல்
எக்கர் – மேடு
கடுகி - விரைந்து

**பக்கம் 82**

புணை – தெப்பம்
நெடுநீர் – நீண்டநீர்
இன்னா - தீது
அமுதமொழி – நன்மொழி
ஐயுற்றனர் – சந்தேகித்தனர்
சித்திரப்பாவைபோல்தல் – அசைவற்றிருத்தல்
நீத்தம் - நீந்துதல்
பித்து - பைத்தியம்
நீர்வழிகண் – கண்ணிலிருந்து நீர்வழிதல்

**பக்கம் 83**

ஐயகோ – ஐயோ
அரற்றி – அழுது
சிந்தியமூக்கு – நீர்சிந்தும் மூக்கு
சிதைந்த – அலங்கோலமான
கரையூடு – கரைவழியே
இயம்பும் திறத்தினர் - சொல்லும் இயல்பினர்
அழுங்கி – வருந்தி

**பக்கம் 84**

ஒப்ப – சமமாக
நோக்கும் - மதிக்கும்

போற்றினும் – பாதுகாப்பினும்
பரிவாரம் – சேனை முதலியன
நடுக்குறும் – நடுங்கத்தக்க
கோலம் - அழகு
பிரலாபித்து - அழுது
துணுக்குற்று – நடுங்கி
நீத்து – விட்டு
அணங்கு – தெய்வப்பெண்
ஊண் – உணவு
அரற்றுதல் - வாய் புலம்புதல்
கற்பின் கொழுந்து – கற்பிற் சிறந்தவள்
பொற்பின் செல்வி - அழகிற் சிறந்தவள்

**பக்கம் 85**

விசை - வேகம்
மண்டி – நெருங்கி
பலகால் - பலமுறை
அவயவங்கள் - உறுப்புக்கள்
சலித்தல் – தளர்தல்

**பக்கம் 86**

ஊகித்து – யோசித்து
மேனி – உடம்பு
குற்றுயிர் - குறைந்த உயிர்
அட்டு – சமைத்து

**பக்கம் 87**

பாடினி – பாடுபவள்
ஈடுபட்டு - கவரப்பட்டு
கந்தருவமணம் – களவுமணம்
அற - முழுவதும்
கலுழும் - அழும்
உற்ற - நேர்ந்த
இல்லம் - வீடு

**பக்கம் 88**

துறந்தாள் - விட்டாள்
ஆவன - செய்யவேண்டுவன
உவகை – மகிழ்ச்சி

## 10ஆம் பாடம்: அரசியல்

**பக்கம் 89**

மாசற – குற்றம் நீங்க
பகைப்புலன் – பகைவர்வாழும் பக்கம்
விறலோன் – வெற்றியுடையோன்
மன்னுயிர் – நிலைபெற்ற உயிர்
மாண்பு - குணம்
உயிர்த்தே - உயிராகஉடையது
மலர்தலை - இடம் அகன்ற
விநோத சாதுர்ய புத்தி - புதிய விவேக புத்தி
நரைமுது மக்கள் – நரைத்த முது மக்கள்
உரவோன் - வலியோன்
மகிதலம் – பூமி

**பக்கம் 90**

எண்பேராயம் :- சாந்து, பூ, கச்சு, ஆடை, பாக்கு, இலை,

கஞ்சுகம் (சட்டை), நெய் இவற்றை ஆராயும் எண்மர்

ஐம்பெருங் குழு – அரசர்க்கு இன்றியமையாத ஐவகை அரசியற் தலைவர். அவர்: மந்திரியர், புரோகிதர், சேனாதிபதியர், தூதர், சாரணர்.

நொடி – துன்பம்
மருத்துவர் - வைத்தியர்
உசாவி – ஆராய்ந்து
புலம்பெயர் – இடம் பெயர்ந்த
கலந்து – சேர்ந்து
முட்டாத – குறையாத

**பக்கம் 91**

அகவிருள் – அறியாமை
கல்விக்கழகம் – கல்லூரி
நீர்ப்பாசனம் – நீர்ப்பாய்ச்சல்

**பக்கம் 92**

பேருதவி – பெருமை + உதவி
வேற்றுப்புலவேந்தர் – பகை நாட்டரசர்
பரோபகாரம் – பிறர்க்குதவி
விப்பிரர் – பிராமணர்
மார்க்கம் – வழி
பணித்தான்–கட்டளையிட்டான்
ஆதரவு – அன்பு
நித்தியவிழா – தினப்பூசை
நைமித்திகவிழா – திருவிழா

## 11ஆம் பாடம்: தமிழ்ப்பற்று

**பக்கம் 93**

வளன் – செழிப்பு
மேனிலை – மேல் + நிலை
ஆர்வம் – ஆசை

**பக்கம் 94**

கமழ – வீச
வெறுப்பு – மிகுதியாக
இயம்பும் – சொல்லும்

**பக்கம் 95**

பெறலரும் – பெறுதற்கரிய
அட்சரலட்சம் பொன் – ஒரு எழுத்துக்கு இலட்சம்பொன்
தமிழகம் – தமிழ்நாடு
போற்றிய – புகழ்ந்த

**பக்கம் 96**

மிளிர்ந்து – சிறந்து
ஆடரங்கு – நடனமாடுமிடம்
பட்டிமண்டபம் – வித்தியா மண்டபம்
பாவலர் – புலவர்

**பக்கம் 97**

கேள்வி – அறிவுடையோர் வாய்ச்சொல்

**பக்கம் 98**

காலன் - யமன்
துய்க்க – அனுபவிக்க
ஆணை – கட்டளை

# வினாக்கள்

## 1ஆம் பாடம்

1. சோழநாடு எங்கேயுள்ளது? எத்தகைய சிறப்புக்கள் வாய்ந்தது?

2. சேட்சென்னி யாருடைய புதல்வன்? சகோதரன் பெயர் யாது?

3. இளஞ்சேட்சென்னி அரசனான தெங்ஙனம்?

4. இளஞ்சேட்சென்னி யாரை மணந்தான்? எங்ஙனம்? அவள் எத்தகையள்?

5. நிமித்திகன் இளஞ்சேட்சென்னிக்கும் சேட்சென்னிக்கும் கூறியதென்ன?

6. தனக்குப் புதல்வன் பிறந்தபோது சேட்சென்னி வருந்தியதேன்?

## 2ஆம் பாடம்

1. இளஞ்சேட்சென்னியின் இறப்பு யாருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது? ஏன்?

2. இரும்பிடர்த்தலையார் தம் தங்கையுடன் வதிந்து வந்தமையின் காரணம் என்ன?

3. கரிகாலன் வதிந்த வீடு தீக்கிரையான தெங்ஙனம்? கரிகாலன் அக்கினியினின்றும், எவ்வாறு, யாரால் மீட்கப்பட்டான்?

